**தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம் - 2016**

தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1981 இன் 13 ஆம் இலக்க தேசிய சுகாதார அபிவிருத்தி நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிய அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் சுகாதார அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அவ்வதிகாரச்சட்டத்தின் 10(4) ஆம் பிரிவில் குறிப்பிடப்படும் வருமானச் செலவினக் கூற்று பின்னிணைப்பு இலக்கம் 01 ஆகவும் நிதியத்திற்குரிய முதலீடு தொடர்பான கூற்று பின்னிணைப்பு இலக்கம் 02 ஆகவும் உள்ளடக்கப்பட்டு நிதியத்தின் நடவடிக்கைகளது நிர்வாகம் தொடர்பான அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின்

நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அம்பாறை பொது வைத்தியசாலையின் கட்டண வார்ட் நிர்மாணத்தின் II ஆம் கட்டத்திற்குரிய 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அட்டுறு செலவினம் ரூபா 3,888,820 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய கண் வங்கிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 686,547 கண் வில்லை தயாரிப்புக் கட்டணம் (Cornea Processing Charges) கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் எதிர்வரும் ஆண்டின் போது வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் கண் வில்லைகளுக்காக கிக்கப்பெற்ற முற்பணம் ரூபா 4,101,282 தொகை முன்கொடுப்பனவின் கீழ் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) கண் வங்கிக்கு நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 5,536,558 ஆன ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதிற்றும் அதற்குரிய பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது கண் வங்கிக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 45,397,933 ஆன முழுத்தொகையும் நிதியத்தினால் செலவினமாகக் கருதி வருமானக் கூற்றிக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் அப்பணத்திலிருந்து கொள்வனவு செய்ய்பட்ட மருந்துகள் மற்றும் சிகிச்சை பொருள் இருப்புக்களிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கண் வங்கியில் மீதியாக காணப்பட்ட ரூபா 5,662,763 என இனங்காணப்படாத கண் வில்லை இருப்பினை இறுதி இருப்பாக நிதிக்கூற்றுக்ககளில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,007,125 ஆன அட்டுறு செலவினம் நிதியத்தினால் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1981 இன் 13 ஆம் இலக்க தேசிய சுகாதார அபிவிருத்தி சட்டத்தின் 8 ஆம் பிரிவு | நிதியத்தினால் ஏதேனும் பணத்தை முதலீடு செய்திருந்தால் அமைச்சரின் கட்டளைகளுக்கு உட்பட்டு முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அமைச்சருக்கு தெரிவிக்காமல் ரூபா 286,647,897 தொகை நிலையான வைப்புக்களிலும் ரூபா 506,402,243 திறைசேரி உண்டியல்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 381 | திறைசேரி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் மீளாய்வாண்டில் அரச வங்கியொன்றில் சேமிப்புக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 424,408,118 மிகையாக இருந்ததுடன், அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 6,443,292 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 417,964,826 ஆன அதிகரிப்பொன்று தென்பட்டது. நானாவித சுகாதார செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 93,031,002 ஆல் குறைவடைந்தமை மற்றும் நன்கொடை பெறுவனவுகள் ரூபா 276,014,234 ஆல் அதிகரித்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 102,502,994 மிகையாக இருந்ததுடன், 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 46,900,783 பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. எனினும் 2014 ஆம் ஆண்டின் பின்னர் தொடர்சியான மிகை ஏற்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 49,171,867 ஆன மிகை 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 6,443,292 வரை குறைவடைந்து மீளாய்வாண்டின் போது ரூபா 424,408,118 வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கும் போது 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 103,461,709 தொகையான நிதியத்தின் பங்களிப்பு 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 45,800,448 ஆன மறைபெறுமதியாக வீழ்ச்சியடைந்திருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 50,804,915 வரை அதிகரித்து அது மீண்டும் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 8,333,801 வரை குறைவடைந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது மீண்டும் ரூபா 426,527,547 வரை அதிகரித்திருந்தது. அந்தந்த ஆண்டுகளில் நிச்சிக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக கிடைக்கப்பெற்றிருந்த நன்கொடைகள் மற்றும் ஏனைய மானியங்கள் ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த நன்கொடைகள் அவ்வாண்டிலேயே பயன்படுத்தப்படாமையால் நிதி விளைவுகளில் போதியளவு விலகலொன்று இடம்பெற்றிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1981 இன் 13 ஆம் இலக்க தேசிய சுகாதார அபிவிருத்தி நிதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் இலங்கையின் சுகாதார பாதுகாப்பு சேவைகள் வழங்கும் நிறுவனங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தல், இலங்கையின் சுகாதார பாதுகாப்பு சேவைகளில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு இடையே ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்தல் மற்றும் அவர்களின் கல்வி அல்லது அறிவினை விருத்தி செய்தல், விசேட முன்மொழிவு திட்டங்கள் தொடர்பான செயற்பாடுகளுக்காக கிடைக்கப்பெறும் நன்கொடைகளை இயலுமான வரை அதற்காக பயன்படுத்துதல் மற்றும் மக்களின் சுகாதார பாதுகாப்பிற்காக பணத்தை ஈடுபடுத்தல் மற்றும் இலங்கையின் சுகாதார சேவைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற மருத்துவ உபகரணங்கள் மற்றும் அத்தியவசிய மருந்துகளை கொள்வனவு செய்தல் நிதியத்தின் நோக்கங்களாகும். இந்நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பான பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) நாட்டின் கஷ்டப் பிரதேசங்களில் சுகாதார பாதுகாப்பு சேவைகளை வழங்கும் நிறுவனங்களில் நிலவும் பெரும்பாலான குறைபாடுகளைக் குறைப்பதற்கு நிதியத்தின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதை அந்நிறுவனங்கள் அறிவுறுத்தப்படமை மற்றும் அறிவிப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்காத காரணத்தினால் நிதியத்தின் நோக்கங்கள் போதியளவில் அடையப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான ஒவ்வொரு ஆண்டுகளின் போதும் நிதியத்திற்குச் சொந்தமான பொது நிதியத்தில் காணப்பட்ட ஆண்டிற்காக பயன்படுத்தக்கூடியதாக இருந்த நிதி முறையே ரூபா 230,311,207, ரூபா 276,654,645, ரூபா 261,124,443 மற்றும் ரூபா 295,194,406 மற்றும் ரூபா 358,057,285 ஆக இருந்த போதிலும் அதில் முறையே 78, 62, 79, 82 மற்றும் 77 சதவீதம் நிதியத்தின் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குருநாகல் மாவட்டத்தின் 3,000 பார்வை குறைபாடுடைய மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளை வழங்குவதற்கு வெளிநாட்டு அரசொன்றினால் ரூபா 3,044,000 தொகை நன்கொடை வழங்குவதற்கு இணங்கப்பட்டிருந்ததுடன், புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் 2012 ஒக்தோபர் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2013 செப்தெம்பர் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் கிடைக்கப்பெற்ற மொத்த நன்கொடை ரூபா 2,289,402 தொகை மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட மூக்குக் கண்ணாடிகளின் எண்ணிக்கை 1,046 ஆக இருந்ததுடன், செயற்திட்ட காலம் 2014 செப்தம்பர் 30 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்த போதிலும், மேலும் 12 சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பிரிவுகளில் 3,283 பார்வை குறைபாடுடைய மாணவர்கள் இருப்பதாக இனங்காணப்பட்டிருந்த போதிலும், மூக்குக் கண்ணாடிகளை வழங்கும் நடவடிக்கைகள் விஷன் 2,020 செயற்திட்டத்தினால் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் 6 சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பிரிவுகளில் பார்வை குறைபாடுடைய பாடசாலை மாணவர்களை இனங்காணப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி அளவிலும் செயற்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றல் முறையே 35 சதவீதம் மற்றும் 48 சதவீதம் மாத்திரமாக இருந்ததுடன், பலவீனமான செயன்முன்னேற்றம் காரணமாக எஞ்சிய ரூபா 754,598 ஆன மானியம் கிடைக்காமல் போயிருந்தது.

(இ) 2014 மற்றும் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பறவை தொற்று இன்புலுவன்சாவிற்கு வெற்றிகரமாக முகங்கொடுக்கும் எதிர்பார்ப்பில் முன்தயார்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டத்திற்கு அமெரிக்க ஐக்கிய குடியரசினால் மீளாய்வாண்டில் ரூபா 23,568,160 தொகை நிதி உதவி வழங்கியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் செயற்திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றக்கூடிய வகையில் காலக் கணிப்புடன் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டிற்கு தயாரிக்கப்பட்ட பாதீட்டின் பிரகாரம் வேலைத் திட்டத்தின் பிரகாரம் 25 செயற்பாடுகளுக்காக ரூபா 21,673,080 ஆன நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 9,288,284 நிதிஏற்பாடு செய்யப்பட்ட 16 செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒரு மாதத்தில் ஒரு வைத்தியசாலையிலிருந்து 10 Influenza Like Illness (ILI) மாதிரிகள் வீதமும் 10 Severe Acute Respiratory Infection (SARI) வீதமும் வருடாந்தம் ILI 120 மாதிரிகள் மற்றும் (SARI) 120 மாதிரிகள் 17 வைத்தியசாலைகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் மாதிரிகளின் கிடைப்பனவு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டதுடன், 13 வைத்தியசாலைகளிலிருந்து கிடைத்திருந்த மாதிரிகளின் எண்ணிக்கை 5 முதல் 60 வரையான வீச்சில் காணப்பட்டன. அதன் பிரகாரம் சிறந்த செயன் முன்னேற்றமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படாததுடன் மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்ட 1,560 Influenza Like Illness (ILI) பரிசோதனைகளில் 552 பரிசோதனைகளும் 480 Severe Acute Respiratory Infection (SARI) பரிசோதனைகளில் 279 பரிசோதனைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆசியாவில் கண் பார்வையற்றோரை குறைப்பது உட்பட இலங்கை மற்றும் மற்றும் ஆசிய நாடுகளில் தேவைப்பாட்டின் பிரகாரம் உயர் தர்திலான கண் வில்லைகளை வழங்குவதற்காக நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் இலங்கை கண் வங்கியை தாபிப்பதற்கு 2010 ஆம் ஆண்டின் போது சிங்கப்பூரின் Asia Cornea Foundation நிறுவகத்துடன், புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) உடன்படிக்கையின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கை தேசிய கண் வங்கியின் சட்டத்தின் மூலம் நம்பிக்கைப் பொறுப்பொன்றக தாபிப்பதற்கு இணங்கப்பட்டு அதற்காக அமைச்சரவை அங்கீகாரம் 2013 ஆகஸ்ட் 29 ஆந் திகதி கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், இவ்வறிக்கை திகதி சட்டத்தை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) அதிகாரச்சட்டத்தை செயற்படுத்தும் வரை இலங்கை தேசிய கண் வங்கியின் நடவடிக்கைகள் செயற்திட்டமொன்றாக தொடர்ச்சியாக நடாத்திச்செல்வதற்கும் 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியணியினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், அச்சுற்றிக்கையின் பிரகாரம் செயற்திட்டமொன்றாக கருதுவதற்கு தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க முடியாமல் இருந்தது. எனினும் அது தொடர்பாக எடுக்கக்கூடிய ஏனைய மாற்று நடைமுறைகள் தொடர்பாக கண்டுபிடிப்பதற்கும் அது தொடர்பாக அமைச்சரவை அறிவூட்டுவதற்காக இவ்வறிக்கை திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) உடன்படிக்கையின் பிரகாரம் கண் வங்கியின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நிறைவேற்ற வேண்டிய செயற்பாடுகளின் முன்னேற்றம் இலங்கை தேசிய கண் வங்கி மற்றும் அமைச்சரவையினால் அவ்வப்போது மீளாய்வுசெய்யப்பட்ட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் கீழ் செயற்படுத்தப்படும் இலங்கை தேசிய கண் வங்கியின் கடமைகளுக்காக தேவையான உத்தியோகத்தர்கள் சேவை தேவைப்பாட்டின் பிரகாரம் இணைக்கப்படாமல் இலங்கை தேசிய கண் வைத்தியசாலையில் சேவை புரிந்து வந்த 9 தாதியரும் சுகாதார பதவியணி உத்தியோகத்தர்கள் 10 பேரும் அதன் சேவைக்காக இரண்டாம் அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். மேலும் 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சரவை, பொது நிர்வாக அமைச்சு அல்லது திறைசேரியால் குறிப்பாக அங்கீகரிக்கப்பட்டிருந்த நலன்களை மாத்திரம் நிர்வாக சபையின் அங்கீகாரத்துடன் செலுத்த முடியுமான போதிலும், மேற்படி 19 உத்தியோகத்தர்களுக்காக அவர்களுக்கு உரித்தான சம்பளம் மற்றும் படிகளுக்கு மேலதிமாக செயற்திட்டப் படிகளாக ரூபா 1,092,549 தொகை மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே சுகாதார அமைச்சின் 3 உத்தியோகத்தர்களுக்கு தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் 4 உத்தியோகத்தர்களுக்கும் கண் வங்கியின் 8 உத்தியோகத்தர்களுக்கும் கௌரவப் படிகளாக ரூபா 853,800 கொடுப்பவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) டெங்கு மருந்து சிகிச்சை ஒத்திகை பார்ப்பதற்கான குடும்பக் கல்வி செயற்திட்டமொன்றை கொலன்னாவ சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பிரிவில் ஆரம்பிப்பதற்காக வெளிநாட்டு தனியார் கம்பனியொன்று ரூபா 52.9 மில்லியன் மானியமொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் மாதத்தின் போது செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2017 திசெம்பரில் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 22 ஆக இருந்ததுடன் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய படிகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகரித்திருந்தது. மேலும் அங்கீகரிக்கப்பட்ட பதவி வகைகளுக்கு உரித்தல்லாத சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (நிதி), பிரதி பணிப்பாளர் நாயகம் (நிதி), நிதியத்தின் கணக்காளர் உட்பட 6 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது இச்செயற்திட்டத்தின் கீழ் ரூபா 344,400 ஆன படிகள் கொடுப்னவு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீகஹகியுல வைத்தியசாலையின் வாட் தொகுதி நிர்மண ஒப்பந்தத்தின் வேலை நிறுத்தப்பட்டிருந்த போதிலும் ரூபா 1,372,346 தொகையான செயலாற்றல் பிணைப் பொறுப்பினை பணமாக்குவதற்கு 7 ஆண்டு காலமாக தவறியிருந்தது.

### 4.3 கொள்வனவு மற்றும் ஒப்பந்தச் செயற்பாடு

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அத்தாவெட்டுனுவெவ கிராமோதய சுகாதார நிலைய நிர்மாணத்திற்காக ரூபா 5,334,272 இற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2013 மார்ச் 28 ஆந் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டு 2013 யூலை 27 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டும் ஒப்பந்தக்காரரின் கட்டுப்பாட்டிலிருந்து விலகிய விடயங்களின் பேரில் தாமதம் ஏற்படுவதை உறுதிப்படுத்துவதற்காக போதியளவு சான்றுகளுடன் ஒப்பந்தக்காரரால் மேற்கொள்ளப்படுகின்ற வேண்டுகோளை கருத்திற்கொண்டு ஒப்பந்தக்காலத்தை நீடிக்க முடியுமான போதிலும் அவ்வாறான சான்றுகள் மற்றும் வேண்டுகோள் ஒன்று சமர்ப்பிக்கப்படாதிருக்கையில் வட மாகாண கட்டிடத் திணைக்களத்தின் பிராந்திய பொறியியலாளரால் ஒப்பந்தக்காலம் நீடிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அது முறையான காலநீடிப்பொன்றாக இல்லாமையால் 7 மாத தாமத கால்திற்ககா ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நாளொன்றுக்கு ஆரம்ப ஒப்பந்தப் பெறுமதியில் 0.05 சதவீதம் கூடியது 10 சதவீதத்திற்கு உட்பட்டு தாமத கட்டணமாக ரூபா 533,427 அறிடப்பட வேண்டிய போதிலும் அப்பம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஹிங்குரக்கொடை ஆனந்த பெண்கள் தேசிய பாடசாலையின் பற்சிகிச்சை நிலையத்தை புதுப்பித்தல் ரூபா 2,776,692 இற்கு ஒப்பதம் வழங்கப்பட்டிருந்த போதிலும், பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் நிறவேற்றப்பட்ட வேலைகள் தொடர்பாக பொறியியலாளர் சான்றிதழொன்று இல்லாமல் ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இறுதி பட்டியலுக்காக ரூபா 1,855,163 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தத,

### 4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

---

கண் வில்லைகளின் தரத்தின் தன்மை அடிப்படையில் தரப்படுத்துவதற்காக தேவையான பரிசோதனை மேற்கொள்ளப்படும் உபகரணத்தின் (Specular Microscope) மென்பொருள் அவ்வப்போது உரிய வகையில் செயற்படாமையால் புதிய இயந்திரமொன்றை கொள்வனவு செய்யப்பட வேண்டுமென பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்த போதிலும் 2017 யூன் வரையிலும் அப்பெறுகை இடம்பெற்றிருக்கவில்லை. இதன் பிரகாரம் கண் வில்லை குறைந்த மட்டத்தில் தரப்படுத்துவதற்கு நேர்நத காரணத்தினால் 2016 ஆம் ஆண்டில் கண் வங்கிக்கு இழக்கப்பட்ட வருமானம் ரூபா 2,774,548 ஆக இருந்தது.

**4.5 நோக்கத்திற்கு முரணான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) Association of Sri Lankan Neurologist (ASN) இற்கு அந்நிறுவனத்தின் ஆரம்ப நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தனியார் கம்பனியொன்றினால் நிதியத்தினூடாக நன்கொடையாக வழங்கப்பட்ட ரூபா 400,000 பணம் அந்நிறுவனத்தினால் 2015 நவம்பர் 20 ஆந் திகதி நடாத்தப்பட்டிருந்த கொக்டேல் வழா செலவினத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை மருத்துவச் சங்கத்தின் பெயரில் தொழிற்சங்கமொன்றின் (Sri Lanka Medical Association) 129 ஆவது வருடாந்த சர்வதேச வைத்திய செயலமர்வினை நடாத்துவதற்காக ரூபா 4,000,000 ஆன மானியமொன்று வழங்கியிருந்ததுடன் அச்சங்கத்தின் அச்சீட்டு நடவடிக்கைகளுக்காக ரூபா 7,894,450 தொகை நிதியத்தினால் செலவிடப்பட்டிருந்தது.

(இ) அரச நிறுவனங்களுக்கு கடன் தொகை வழங்குவதற்கு தேசிய சுகாதார அபிவிருத்தி நிதிய அதிகாரச்சட்டத்தின் மூலம் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாதிருக்கையில் 2016 யூன் 07 ஆந் திகதி ரூபா 10 மில்லியனான வட்டியற்ற கடன்தொகை மாதாந்த தவணை அறவீட்டின் அடிப்படையில் இலங்கை ஆயர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் முறையான உடன்படிக்கையொன்று வந்திருக்கவில்லை.

**4.6 நிதியப் பயன்பாடு**

நிச்சயிக்கப்பட்ட 10 செயற்பாடுகளுக்காக நன்கொடையாக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 11,134,158 தொகை 3 ஆண்டுகளுக்கு 29 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படால் இருந்ததுடன், தேவையைக் கருதி ஏனைய செயற்பாடுகளுக்கோ அல்லது அப்பணத்தை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயல் நடவடிக்கைத் திட்டம்**

தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் பொது நிதியத்திற்குரிய பணத்திலிருந்து சட்டத்தின் 07 ஆம் பிரிவின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள செயற்பாடுகக்கு இணங்காத வகையில் நிதியத்தினால் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் ஆரம்பத்திலிருந்து செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்குரிய நிதியத்தின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுடன் ஒப்பிடும்போது 23 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுப் பரப்புகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிதிய முகாமைத்துவம் | (i) பொது நிதியத்திற்குச் சொந்தமான நிதியத்தை பயன்படுத்தும் போக்கினை மேம்படுத்த வேண்டும். |
| | (ii) கிடைக்கப்பெறும் பணத்தை உரிய செயற்பாடுகளுக்கே ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) சுகாதார அபிவிருத்தி செயற்திட்டக் கட்டுப்பாடு | விழா மற்றும் வெவ்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு கொடுப்பனவு செய்யும் போதும் உணவு பொருட்களுக்காக செலவிடும் போதும் வருகை தொடர்பான சரியான உறுதிப்படுத்தலொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) ஒப்பந்த நிர்வாகம் | ஒப்பந்த வேலைகள் முறையான கண்காணிக்கப்படாமை. |

பின்னிணைப்பு 01

***வருமான மற்றும் செலவினக் கூற்று***

---------------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் வருமானம் மற்றும் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு | | | |
|---|---|---|---|---|
| | **2016** | | **2015** | |
| | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** |
| **வருமானம்** | | | | |
| ஜாதிக சம்பத லொத்தர் வருமானம் | 69,611,040 | | 69,322,320 | |
| நன்கொடைகள் | 430,643,474 | | 154,629,240 | |
| முதலீட்டு வட்டி | 50,513,772 | | 20,527,297 | |
| ஏனைய வருமானம் | 70,785,220 | | 51,628,084 | |
| | | **621,553,506** | | **296,106,941** |
| **செலவினம்** | | | | |
| நிர்வாக செலவினம் | 2,925,352 | | 2,534,903 | |
| நிதி மற்றும் ஏனைய செலவினம் | 145,302 | | 23,010 | |
| சுகாதார அபிவிருத்தி செயற்திட்ட செலவினம் | 194,074,734 | | 287,105,736 | |
| | | **(197,145,388)** | | **(289,663,649)** |
| மிகை | | **424,408,118** | | **6,443,292** |

முதலீட்டு கூற்று
--------------------

| வங்கி | சான்றிதழ் இலக்கம் | முதலீடு செய்த திகதி | முதலீட்டுக் காலம் | 2016 சனவரி 01 இல் மீதி | 2016 ஆம் ஆண்டில் முதலீடு | 2016 ஆம் ஆண்டில் மீளப் பெறல் | 2016 திசெம்பர் 31 இல் மீதி |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| நிலையான வைப்புக்கள் - மக்கள் வங்கி | 1386001000052259 | 2016/09/29 | 6 மாதங்கள் | 23,000,000 | - | - | 23,000,000 |
| | 1386001000052277 | 2016/09/29 | 6 மாதங்கள் | 15,000,000 | - | - | 15,000,000 |
| | 1386001000037746 | 2016/10/08 | 6 மாதங்கள் | 1,500,000 | - | - | 1,500,000 |
| | 1386001000052295 | 2016/09/29 | 6 மாதங்கள் | 20,000,000 | - | - | 20,000,000 |
| | 1386001000052259 | 2016/09/29 | 6 மாதங்கள் | 50,000,000 | - | - | 50,000,000 |
| | 1386001000052268 | 2016/09/29 | 6 மாதங்கள் | 35,000,000 | - | - | 35,000,000 |
| நிலையான வைப்புக்கள் - இலங்கை வங்கி | 78651737 | 2016/02/12 | 1 ஆண்டு | - | - | - | 50,000,000 |
| | 78638673 | 2016/2/10 | 1 ஆண்டு | - | - | - | 20,000,000 |
| | 78862661 | 2016/3/2 | 1 ஆண்டு | - | - | - | 42,728,226 |
| | 78965346 | 2016/3/18 | 1 ஆண்டு | - | - | - | 10,419,671 |
| | 778651776 (Eye Bank) | 2016/2/12 | 1 ஆண்டு | - | - | - | 19,000,000 |
| | | | | | | | ---------------- |
| | | | | | | | 286,647,897 |
| | | | | | | | ========== |
| திறைசேரி முறி - இலங்கை வங்கி | 314 | | | 18,704,743 | - | - | - |
| | 314 | 2016/12/23 | 6 மாதங்கள் | 4,844,960 | - | - | 4,776,690 |
| | 314 | | 6 மாதங்கள் | 40,388,919 | - | - | - |
| | 314 | 2016/09/23 | 6 மாதங்கள் | 19,347,040 | - | - | 20,825,003 |
| | 314 | 2016/09/20 | 6 மாதங்கள் | 12,500,000 | - | - | 28,768,650 |
| | 314 | 2016/09/20 | 6 மாதங்கள் | 80,000,000 | - | - | 48,031,900 |
| | 1230034 | 2016/12/27 | 6 நாட்கள் | 13,000,000 | - | - | 33,000,000 |
| | 1176831 | 2016/9/14 | 99 நாட்கள் | 10,520,000 | - | - | 86,000,000 |
| | | | | | * தகவல்கள் இல்லை | | 25,000,000 |
| Repo | 1232112 | 2016/12/30 | 30 நாட்கள் | - | - | - | 260,000,000 |
| | | | | | | | ---------------- |
| | | | | | | | 506,402,243 |
| | | | | | | | ========= |